ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை





வேணு : 1 மார்ச் 1996 கானம் : 8

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 மார்ச் 1996 கானம் : 8

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 4 | 4 |
| 3. | ஸ்ரீ குருஜி - 7 | 8 |
| 5. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 7 | 10 |
| 6. | ஸம்ஸ்க்ருத ஸம்மேளனத்தில் ஸ்ரீ குருஜியின் உரை - தொடர்ச்சி | 14 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 7 | 18 |
| 8. | ப்ரச்நோத்தர ரத்நமாலிகா - 2 | 23 |
| 9. | செய்திகள் | 30 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



மதுராபுரி ஆஸ்ரம கோ ஸாலாவில் ஸ்ரீ குருஜி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

## நாமாவைப் பாடுவோம் ஹரி

*ஹரி நாமாவை ப்ரபு நாமாவை*
*விட்டல நாமாவைப் பாடுவோம்*

*மந்திரம் தந்திரம் யந்திரம்*
*எதற்கும் வசப்படவே மாட்டான்*
*நாமா சொல்லி கதறி அழைத்தால்*
*தாங்கவும் மாட்டான் (நாமா)*

*பட்டம் பதவி பணம் இவை*
*எதையும் பார்க்கவே மாட்டான்*
*நாமா ஒன்று இருந்து விட்டால்*
*மயங்கியே விடுவான் (நாமா)*

*பாவம் புண்ணியம் தர்மம்*
*என்ற கவலையே இல்லையே*
*நாமா ஒன்று இருந்து விட்டால்*
*கரையேற்றி விடுவான் (நாமா)*

*அன்னை தந்தை ஆஸான்*
*எல்லாம் எனக்கு அவன் தானே*
*முரளீதரனுக்கு உலகில்*
*என்றும் கவலையே இல்லையே (நாமா)*

---

*விடா முயற்சி, பொறுமை, நம்பிக்கை இவை மூன்றும்தான் ஸாதகனுக்கு அவசியம் தேவையானது.*

- ஸ்ரீ குருஜி

# மதுரமான மஹனீயர் - 4

இவர் தன்னிடம் வருபவர்களில் ஏழை, பணக்காரன், முக்கியஸ்தர்கள் என்ற பாகுபாடு பார்க்கமாட்டார். வித்வான்கள், வைதீகர்கள், பாகவதர்களுக்குப் பிரதான்யம் கொடுத்துப் பழகுவார்.

ஸ்ரீ குருஜி அப்பொழுது முதலில் இருந்த Flat-ல் இருந்த சமயம். நானும் என் கணவர் ஜானகிராமனும், என் பெண் விஷ்ணு ப்ரியாவும் தினமும் அவர் நடத்தும் ஸத் ஸங்கத்திற்கு விடாமல் போய் கலந்து கொள்வோம். அப்பொழுது ஒரு நாள் ஸ்ரீ குருஜியுடன் பகவத் விஷயமாக பேசிக் கொண்டிருந்தோம்.



என் கணவர் விதியை மாற்ற முடியுமா? சிலர் மாற்ற முடியும் என்கின்றார்கள், சிலர் முடியாது என்கின்றார்கள், எது உண்மை? என்று வினவினார்.

அதற்கு ஸ்ரீ குருஜி பதிலுரைக்கையில் 'விதியை கடவுளோ, குருவோ நினைத்தால் கண்டிப்பாக மாற்ற முடியும்' என்று கூறிவிட்டு, ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் சரித்திரத்தில் நடந்த ஒரு சம்பவத்தைத் தனக்கே உரிய பாணியில் சொல்ல ஆரம்பித்தார்.

ராமக்ருஷ்ண பரமஹம்ஸரை தரிசனம் செய்ய மதுர்பாபு வந்தார். குரு மஹராஜ் (ஸ்ரீ ராமக்ருஷ்ணர்) என்ன மதுர்! ஏன் என்னவோ போல் இருக்கின்றாய் என்று கேட்டார்? அதற்கு மதுர்பாபு தன் மனைவிக்கு உடல் நலம் சுகம் இல்லை, அதனால்தான், தான் கவலையாக இருப்பதாகக் கூறினார். குரு மஹராஜ், நான் அவளுக்கு சுகம் ஏற்பட அருள் பாலிக்க வேண்டும் என்று நீ ஆசைப்படுகின்றாயா? என்று வினவினார். எத்தனையோ முறை தன்னுடைய வாழ்க்கையில் அவரின் அருளை உணர்ந்திருந்தும், அந்த சமயத்தில் நீங்கள் என்ன செய்ய முடியும் குரு மஹராஜ்? எல்லாம் விதிப்படித்தானே நடக்கும் என்று கூறி விட்டார். உடனே குரு மஹராஜ் காளி நினைத்தால் கூட விதியை மாற்ற முடியாதா மதுர்? என்று குழந்தையைப் போல் கேட்டார். உடனே மதுர்பாபு காளி நினைத்தாலும் முடியாது என்று கூறினார். உடனே பரமஹம்ஸர் அங்கு ஒரு புஷ்பச் செடியைக் காண்பித்து இதனுடைய விதி என்ன என்று கேட்டார். மதுர்பாபு சிவப்புப் புஷ்பங்களைப் புஷ்பிப்பதுதான் இதனுடைய விதி என்று கூறினார். அத்துடன் அந்தப் பேச்சு முடிந்து விட்டது. மறு நாள் காலையில் அந்தச் செடி பல வண்ணங்களில் புஷ்பங்களைப் புஷ்பித்திருந்தது. குரு மஹராஜ் மதுர்பாபுவை அழைத்துக் காண்பித்து காளி நினைத்தாள், மாற்றி விட்டாள் என்று கூறி கலகலவென்று சிரித்தார். மதுர்பாபு அந்த செடியில் உள்ள புஷ்பங்களைக் கண்டு பிரமித்து விட்டார்.

ஸ்ரீ குருஜி, ஆகவே கடவுளோ, குருவோ கண்டிப்பாக விதியை மாற்ற முடியும். ஒரு பறவையை நோக்கி அம்பு வந்து கொண்டிருப்பதை அந்தப் பறவை உணராதபோது நாம் அந்த அம்பை தடுத்து விடலாம், அல்லது பறவையை சப்தம் செய்து அந்த இடத்தில் இருந்து விரட்டி விடலாம் அல்லவா? அது போல் குருவிற்கு நம் மேல் ஏவப்பட்டுள்ள கர்ம வினை நன்றாகத் தெரியும். நம்மை பாதிக்காத அளவில் அவரால் நிச்சயமாக செய்ய முடியும் என்றும் கூறினார். மழை பெய்யத்தான் போகின்றது என்றாலும் நம்மை பாதிக்காத அளவில் ஒரு குடையினால் தடுத்துக் கொள்கின்றோம் அல்லவா? அது போல நாம் செய்யும் நல்ல காரியங்கள் அனைத்தும் நம்முடைய ஊழ்வினையின் வீர்யத்தை நம்மை அதிகம் பாதிக்காத அளவில் குறைத்துத் தரும் என்றார்.

இத்துடன் இந்த சம்பாஷணை முடிந்து விட்டது. நாங்கள் இரவு வெகு நேரம் ஆகி விட்டதால் வீட்டிற்கு வந்து உறங்கி விட்டோம். மறு நாள் காலை பெருமாள் பூஜைக்காகப் பூப்பறிக்கச் சென்ற என் கணவருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. வெள்ளை செம்பருத்திச் செடி ஒன்று எங்கள் வீட்டில் இருந்தது. அதில் தினமும் நிறைய வெள்ளை செம்பருத்தி பூக்கும். நாங்கள் பூஜைக்கு எடுத்துக் கொள்வோம். அந்தச் செடி திடீர் என்று ரோஸ் கலர் புஷ்பங்களை தொடர்ந்து இரண்டு நாட்களுக்குப் புஷ்பித்தது. அதன் பிறகு மீண்டும் வெள்ளை புஷ்பங்களேதான் புஷ்பிக்க ஆரம்பித்தது. இது மாதிரி எத்தனையோ விஷயங்களை என்னுடைய ஞாபகத்தில் உள்ளவைகளை மட்டும் எழுதிக் கொண்டு வருகின்றேன்.

பாஸ்கர் என்பவர் ஸ்ரீ குருஜியின் பக்தர். அவர் டாஃபே (TAFE) கம்பெனியில் வேலை பார்த்து வருகின்றார். அவருடைய தாயாரும், சகோதரி மைதிலியும் அடிக்கடி ஸ்ரீ குருஜியின் தரிசனத்திற்கு வருவார்கள். ஒரு சமயம் மைதிலிக்கு வயிற்றில் வலி ஏற்பட்டு டாக்டரிடம் காண்பித்தார்கள். டாக்டர் ஸ்கேன்,

எக்ஸ்ரே எல்லாம் எடுத்துப் பார்த்து விட்டு வயிற்றில் ஒரு கட்டி உள்ளது. ஆபரேஷன் உடனடியாக செய்ய வேண்டும் என்று கூறி விட்டார்கள். உடனே அவர்கள் ஸ்ரீ குருஜியிடம் வந்து விஷயத்தைக் கூறி மிகவும் அழுதார்கள். சின்னப் பெண்ணாக இருப்பதால் ஆபரேஷனை நினைத்து பயம் வேறு, கையில் செலவு செய்ய அந்த நேரத்தில் பணமும் வேறும் இல்லை. டாக்டரோ உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறி விட்டார்கள். என்ன செய்வது என்பதறியாமல் திகைத்தார்கள். ஸ்ரீ குருஜி கருணையுடன் ஸ்ரீநிவாச பெருமாளுக்கு அர்ச்சித்த துளஸியைக் கொஞ்சம் எடுத்துக் கொடுத்து, பெருமாளை நினைத்துக் கொண்டு இதை சாப்பிடு, ஒன்றும் கவலைப்பட வேண்டாம் என்று கூறினார்.

அன்று இரவு அவள் தூக்கத்தில் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள், பக்கத்தில் படுத்திருந்த அவள் அம்மா, அவள் என்ன பேசுகின்றாள் என்று கவனித்ததில், ஸ்ரீ குருஜி என்னுடைய வயிற்றைக் கிழித்து ஆபரேஷன் செய்கிறார் அம்மா, எதையோ எடுத்து வெளியில் போடுகின்றார் என்று கூறி விட்டு, மீண்டும் முன் போலவே உறங்கி விட்டாள்.

மறு நாள் மீண்டும் ஆபரேஷனுக்கு முன்பாக ஒரு முறை டாக்டர் பரிசோதனை செய்த பொழுது, கட்டி தானாகவே கரைந்து விட்டதாகக் கூறி ஆபரேஷன் தேவையில்லை, மருந்து, மாத்திரைகளினாலேயே குணப்படுத்திவிட முடியும் என்று கூறிவிட்டார். அவர்கள் ஸ்ரீ குருஜியின் கருணையை நினைத்து எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார்கள்.

*(தொடரும்)*

**- ஜயந்தி ஜானகிராமன்**

## ஸ்ரீ குருஜி - 7

ஸ்ரீ குருஜி அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது, அவரது வாழ்க்கைச் சம்பவங்களை, அவர்கள் வாய்மூகமாகச் சொல்ல, அவற்றைத் தொகுத்து எழுதும் கட்டுரையின் தொடர்ச்சி.

**– எஸ். ஜயராம்**

அப்படியே இருந்திருக்கலாமே, ஏன் என்னை நடுவில் வந்து எழுப்பியிருக்கவேண்டும் என்று அப்பொழுது நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

இப்படியாகப் பல க்ஷேத்ரங்களுக்கும் அதிஷ்டானங்களுக்கும் சென்று வருவேன். இதில் என்ன வேடிக்கை என்றால் அப்பொழுதெல்லாம் என் கையில் பணமும் அதிகம் இருக்காது. ஊருக்குப் போய் வரவோ, அல்லது போக மட்டுமோதான் இருக்கும். எப்படியோ சமாளித்து விடுவேன். பக்கத்தில் உள்ள ஆசிரமங்களிலோ சத்திரங்களிலோ தங்கிக் கொண்டு கோயிலில் கிடைக்கும் பிரசாதத்தை வாங்கிச் சாப்பிடுவேன். கோவில்களில் யாரும் வராத இடமாகவும், கடைசிப் பிரகாரங்களிலும் நான் தனியாக உட்கார்ந்து கொண்டு ஜபமும் தியானமும் செய்து வருவேன். இப்படியாக நான் அநேகமாக தென் இந்தியாவில் உள்ள எல்லா கோயில்களுக்கும் க்ஷேத்ரங்களுக்கும் சென்றிருக்கின்றேன்.

அப்படி நான் ஒவ்வொரு க்ஷேத்ரத்திற்கும் சென்ற பொழுது அங்கு ஏற்படும் அனுபவங்களை ஸ்மரிக்க ஸ்மரிக்க ஆனந்தம் தருபவை. ஒரு சமயம் **திருமாலிருஞ்சோலை** கள்ளழகர் பெருமாளை தரிசனம் செய்ய வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆவலாக இருந்தது. ஆகவே மதுரை சென்று அங்கு தங்கி பெருமாளை ஸேவிக்கச் சென்றேன். அன்று ஏதோ விசேஷம் போலும். கோயிலில் நல்ல கூட்டம். நானும் கியூ வரிசையில் நின்று பெருமாளை ஸேவிக்க அருகாமையில் சென்றேன். மிகவும் பெரிய அழகான பெருமாள். நான் நன்றாக தரிசனம் செய்வதற்குள் பட்டரும், கோயில் சிப்பந்திகளும் என்னை வெளியே

தள்ளிவிட்டார்கள். நான் வருத்தத்துடன் வெளியே வந்து ஒரு மூலையில் அமர்ந்திருந்தேன்.




திடும் என்று கோயிலில் ஒரே பரபரப்பு. கோயிலில் உயர் அதிகாரி (E.O.வாக இருக்கலாம்) தன்னுடைய பெண் மாப்பிள்ளை யுடன் தரிசனத்திற்கு வந்தார். நேராக கோயிலின் (கர்ப்ப கிரஹத்தின்) உள்ளே செல்ல இருந்தவர், ஏதோ அவர் மனதில் தோன்றி, நேராக என்னிடம் வந்து தரிசனத்திற்கு உள்ளே அழைத்துச் சென்றார். பட்டாச்சார்யாரிடம் முதலில் இவருக்கு திருப்தியாக தரிசனம் செய்து வைக்கவும், பிறகுதான் எங்களுக்கு என்று கூறி, எனக்கு மாலை மரியாதைகள் எல்லாம் செய்யச் சொல்லி, என்னைப் பார்த்து தாங்களுக்கு பெருமாள் ஸேவை திருப்தியாக இருந்ததா என்று கேட்டார். பகவானின் க்ருபையை நினைத்து மிகவும் பூரிப்படைந்தேன்.

இது மாதிரியாக நான் எங்கு சென்றாலும் எந்த முன் ஏற்பாடும் இல்லாமல் தானாகவே பகவானுடைய க்ருபையால் எல்லாம் எனக்கு அனுகூலமாக அமைந்து விடுவது உண்டு.

*(தொடரும்)*

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 7

## ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் - தொடர்ச்சி



அடுத்தக் கணமே ஐயாவாள் மூர்ச்சித்து விழுந்தார். பிறகு ஸஹஜ நிலைக்குத் திரும்பியவராக தன் பிறவியின் பயன் இதுவே என எண்ணி மகிழ்ந்தார்.

ஆம்! ஒவ்வொருவருக்கும் குருவின் கடாக்ஷம், உபதேசம், தீக்ஷை, கைங்கர்யம் இவை கிடைக்கும் போது தான், தங்கள் பிறவி உய்ந்துவிட்டதாக கருதுவர். ஏன்! நம் கண்ணன் கூட குரு கைங்கர்யம் செய்து, தான் அடைந்த ஆனந்தத்தை ஸுதாமாவிடம் பகிர்ந்து கொண்டானல்லவா! *'குரோர ஹேறணைவ புமான் பூர்ண: ப்ரசாந்தயே'* என்பது அன்றோ கண்ணனின் அனுபவ பூர்வமான உபதேசம்!

தமிழ் நாடு வேதம், சாஸ்த்ரம், ச்ரௌத ஸ்மார்த்த அனுஷ்டானங்கள், பகவத் பக்தி, கலைகள், ஸங்கீதம், நாட்டியம் முதலிய எல்லாத் துறைகளிலும் தன்னிகரற்று விளங்கி வந்த காலம். இந்த அனைத்துக் கலைகள், பண்பாடுகள், தர்மம், அத்யாத்ம விசாரம் யாவற்றுக்கும் மிகவும் ப்ரஸித்தி பெற்று அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது தஞ்சை

மாவட்டம். பரம பவித்ரமான காவிரியின் ஸம்பந்தம் இந்த மண்டலத்திற்கு இருந்து வருவதே இதற்கு ஓர் காரணம். ஸ்ரீமத் பாகவதமும், *'காவேரீச மஹாபாகா ப்ரதீசீசமஹா நதீ ॥ யேபிபந்தி ஜலம் தாஸாம் மனுஜா மனுஜர்ஷப । ப்ராயோ பக்தா பகவதி வாஸுதேவே அமலாசயா:'* என்று கூறுகிறது. அந்த தீர்த்தத்தின் மஹிமை, அதை அருந்துபவர்கள் பக்தர்களாக சித்த சுத்தியடைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்பதே.

இந்த தஞ்சை மண்டலத்தை 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 18ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆண்ட மராட்டி மன்னர் ஸஹாஜீ அவர்களின் காலத்தில் வித்வான்களும் அனுஷ்டானம் செய்பவர்களும் நிறைய இருந்தனர். இத்தகைய அரிய வேத வித்யை வளர அரும்பாடுபட்டவர்கள் அரசர்களே. அத்தகையவர்களில் ஒருவரே ஸஹாஜி அவர்கள். மஹா வித்வான்களும், பரம அனுஷ்டானகர்த்தாக்களுமான சுமார் 50 வித்வான்களுக்கு தன் பெயரால், **ஸஹாஜி ராஜபுரம்** என்ற ஓர் கிராமத்தை ஸர்வ மான்யமாக வழங்கி இருந்தார்.

இந்த ஊரை விசலூர் என்றுமழைப்பர். அங்கு ஒரு காலத்தில் யாகம் செய்யும் நூறு தீக்ஷிதர்கள் வசித்தனராம். அவர்களனைவரும் வித்வான்கள். வீண் பேச்சு பேசாதவர்கள். அனுஷ்டானங்கள் செய்த பிறகு அவகாசமிருந்தால் க்ரந்தங்கள் புதிதாக இயற்றியும், சாஸ்த்ரார்த்த விசாரம் செய்தும் பொழுது போக்குபவராம். அதனால் மிகச்சிறந்த ஊர் என்று இந்த கிராமத்தை கவி ராக்ஷஸர் என்ற ஓர் கவி தன் காவ்யத்தில் ***'க்ராமாக்ரகண்யோ விசலூரிஹாஸ்தி'*** என்று கூறுகிறார். தஞ்சை மண்டலத்திற்கே ஓர் பொற்காலம் அது! ஞானமும் - அனுஷ்டானமும் எங்கும் பரிமளம் வீசிற்று! இந்த கிராமத்தில்தான் ஸ்ரீ ஐயாவாள் வசித்து வந்தார்.

அத்தருணத்தில் தான் கலிகாலத்திற்கு மிகவும் உகந்ததும் வேத மார்க்கத்தில் சிறந்ததுமான பாகவத தர்மத்தை - பகவன்னாம கீர்த்தனத்தை - ஸர்வ சாஸ்த்ர ஸம்மதம் என்று

ஸித்தாந்த க்ரந்தங்களால் உலகில் ஸ்தாபித்து ஓர் புதிய எழுச்சியைத் தோற்றுவித்த மஹான் ஸ்ரீ பகவன்னாம போதேந்திரர். காஞ்சியிலிருந்து தென் தமிழ் நாட்டில் விஜயம் செய்து பரமேச்வர அவதாரமான ஸ்ரீ ஐயாவாளை சந்தித்தது. ஸ்ரீதர ஐயாவாளையும், வித்வன் மண்டலத்தையும், பக்த மண்டலத்தையும் கொண்ட தஞ்சை மண்டலம், காவிரி நதி யாவும் அவர் மனதிற்கு மிகவும் உகந்ததாக இருந்தது. காஞ்சியில் குரு இல்லாமல் இருக்கவும் இவர் விரும்பவில்லை. மிகவும் ஏகாந்தமான, சோலைகள் நிரம்பிய, காவிரியின் கிளையாற்றின் கரையில் அமைந்த ஸ்ரீ கோவிந்தபுரம் என்ற எந்தக் கிராமத்தின் நாமத்தை கேட்கும் போதே ஸாதுக்கள் புளகமடைகின்றனரோ அத்தகைய அழகிய சிறிய கிராமம் (திருவிசலூரின் மிக அருகில் அமைந்துள்ள) ஒன்றை ஸ்ரீ போதேந்திராள் உகந்ததாக திருவுள்ளம் பற்றி அங்கேயே தங்கி ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளுடன் சேர்ந்து நாம ஸித்தாந்தம், நாமப் ப்ரசாரம் இவற்றில் ஈடுபட்டார். இந்த ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளைப் பற்றி சிறிது அனுபவிப்போம் :-

ஸ்ரீதர ஐயாவாள் அமாத்ய குலத்தைச் சார்ந்தவர். இவர்கள் வம்சத்தை ப்ரும்மராயர்கள் என்றும் கூறுவர். ஆந்திரத்தின் ராஜ மஹேந்திர வட்டாரம் இவர்களது பூர்வீக ஸ்தானம். இவர்கள் வேதம், ஸகல சாஸ்த்ரங்கள், ராஜ நீதி, அநேகக் கலைகள், தனுர் வேதம் முதலியவற்றை மிகவும் நுட்பமாக கற்றறிந்த வல்லுனர்கள். பாரத நாட்டை ஆண்ட எல்லா அரசர்களும் இவர்களின் துணையைப் பெரிதாக எதிர்ப்பார்த்து அமாத்ய பதவி (திவான் பதவி) அளித்து மதித்து வந்தனர். இதே வம்சத்தைச் சேர்ந்த அனிருத்த ப்ரம்மராயர் சோழ ராஜ ஸபையில் மிக ப்ரஸித்தமாக சரித்திரங்களில் இடம் பெற்றவர். மணிவாசகப் பெருமானும் ஓர் அமாத்ய குலத்தவரே! இத்தகைய உயர்ந்த வம்சத்தில் உதித்து மைசூர் மஹாராஜாவின் ஸமஸ்தானத்தில் மந்திரி பதவி வகித்து அனைவராலும் போற்றப்பட்டவர் **லிங்கார்யர்** என்ற மஹான். அவரது தவத்தின்

பலனாக பரமேஸ்வரனே புத்ர ரத்னமாக ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளாக அவதரித்தார். இவரது பெயர் **வெங்கடேசன்** என்பது. ஸ்ரீதர என்பது அவரின் குலப் பெயர். லிங்கார்யரும் அவரின் மனைவியும் பரம சிவ பக்தர்கள். அதன் காரணமாகவோ என நினைக்கும்படி கர்ப ஸ்ரீமானாக, பிறந்தது முதல் சிவ பக்த ரத்னமாக ஜ்வலிக்கிறார் வெங்கடேசர். மழலையில் முதல் சொல்லாக இவரின் பவழ வாயிலிருந்து உதிர்ந்ததும் ஹர (சிவ) நாமமே. அதில் ருசியும் ஏற்பட்டிருந்ததால் இடையறாது நாம கீர்த்தனம் செய்து வந்தார். அவர் இனி படிக்க வேண்டியது ஒன்றுமில்லை. ஸர்வ சாஸ்த்ரங்களின் ஸாரமும் பகவன்னாமமே அல்லவா! ஆயினும் தந்தை முறைப்படி உபநயனம் செய்வித்து வேதம், அங்கங்கள், மீமாம்ஸா, ந்யாயம் முதலிய சாஸ்திரங்கள் மற்றும் நாகரீகமான வித்யைகளிலும் இணையற்றவராக இவரை ஆக்கிப் பார்த்து பூரித்தார். தொட்டில் பழக்கமான சிவ நாமம் இப்போது அதிகமாகவே அவருக்கு ருசித்தது. பக்தி பரிமளம் வீசத் தொடங்கியது. தந்தை பூரித்த நிலையில் சாந்தமாக சிவ பதம் எய்தினார்.

ஸ்ரீதரரின் ஞானம், தபஸ், தேஜஸ் இவற்றால் ஈர்க்கப்பட்ட அரசன் தந்தை லிங்கார்யரின் ஸ்தானத்தை அலங்கரிக்க வேண்டினான். அரசனது தர்ம நெறி, பக்தி இவற்றுக்குக் கட்டுப்பட்டு மைசூர் ஸமஸ்தானத்தின் மந்திரி பதவியை ஏற்று பொறுப்பாக அரசை நடத்தி மன்னனையும் மகிழ்வித்து வந்தார். அரசவைக்கு பல தேசங்களிலிருந்தும் வரும் யாத்ரீகர்கள், வித்வான்கள் இவர்கள் மூலமாக ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீ ஸதாசிவ ப்ரும்மம் போன்ற மஹாத்மாக்களின் பெருமையைக் கேட்டதிலிருந்து அவர்களின் பால் ஆகர்ஷிக்கப்பட்ட மனதாகி அமைச்சர் பதவியும், நாகரீகமும் இவருக்குக் கசந்தது. எந்த பதவியும், போகமும் மனிதர்களை பகவானிடத்திலிருந்து விலக்கியே விடுகின்றனவோ இவை ஸாதுக்களையும், அவதார புருஷர்களையும் கண்டால் அஞ்சுகிறதே!

*(தொடரும்)*

**சென்னை அகில பாரத ஸாது சங்கம் சார்பில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப் ப்ரேமி ஸ்வாமி களால் நடத்தப்பட்ட ஸம்ஸ்க்ருத ஸம்மேளனத்தில் 28-11-95 அன்று ஸ்ரீ குருஜி ஆற்றிய உரையின் தொடர்ச்சி.**

---

போதேந்திர ஸ்வாமிகள் சில காலம் குருவுடன் தங்கி இருந்தார். பிறகு ஆத்ம போதேந்திர ஸ்வாமிகள், போதேந்திர ஸ்வாமிகளைப் பார்த்து, ''கலி கோரம் அடைந்து வருவதால், இனி ஜனங்களுக்கு பகவந் நாமா ஒன்று தான் கதி. ஆகவே ஸகல ஜனங்களுக்கும் பகவந் நாம உபதேசம் செய்ய வேண்டும். அதற்கு ஆதாரமாக ஸ்ரீ பகவந் நாம ஸித்தாந்தம செய்ய வேண்டும்'' என்று ஆக்ஞாபித்தார். போதேந்திர ஸ்வாமிகள் தான் எதை ஆதாரமாகக் கொண்டு நாம ஸித்தாந்தம் செய்வது என்று கேட்க, குருநாதர் இங்கிருந்து பூரி க்ஷேத்ரத்தைச் சென்று அடைந்தால் அங்கு லக்ஷ்மீதர கவி என்பவரால் செய்யப்பட்ட 'பகவந்நாம கௌமுதி' என்ற க்ரந்தம் உள்ளது. அதை ஆதாரமாகக் கொண்டு 'நாம ஸித்தாந்தம் செய்' என்று அருளினார்கள்.

பூரி க்ஷேத்திரத்தைச் சென்று அடைந்த ஸ்வாமிகள் லக்ஷ்மீதர கவியின் வீட்டை அடைந்தார். இரவு வெகு நேரம் ஆகிவிட்டதால் திண்ணையிலேயே தங்கி விட்டார்.

நடு நிசியில் ஒரு ப்ராம்மணன் தன்னுடன் மிலேச்ச ஸ்வரூபத்தில் இருக்கும் ஒரு ஸ்திரீயுடன் வந்து அந்த வீட்டின் கதவைத் தட்டினான். லக்ஷ்மீதர கவியின் பத்தினியும் அவருடைய குமாரருமான ஜகன்னாத கவியும் வந்து கதவைத் திறந்து அந்த ப்ராம்மணரை வந்த விஷயம் யாது என்று விசாரித்தார்கள். அதற்கு அந்த ப்ராம்மணன் -

''இவள் என்னுடைய பத்தினி. நாங்கள் இருவரும் தீர்த்த

யாத்திரையாகக் கிளம்பி இந்த ஊருக்கு ஸமீபத்தில் வந்த பொழுது ஒரு மிலேச்சன் இவளைக் கடத்திக் கொண்டுச் சென்று விட்டான். நானும் செய்வதறியாது திகைத்து இது தான் நம் விதி போலும் என்றெண்ணி சில ஊர்களுக்குச் சென்று விட்டு மீண்டும் இந்த ஊரின் குளக்கரையை வந்தடைந்த போது இவள் அங்கு மிலேச்ச ஸ்வரூபத்தில் நீர் எடுக்க வந்தாள். என்னைக் கண்டவுடன் கதறி அழுது - ''பிராணநாதா! இனி உங்களுடன் சேர்ந்து வாழ எனக்குத் தகுதியில்லை. உங்கள் வீட்டில் குற்றேவல் செய்யவாவது என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறினாள்.

''அப்பொழுது அங்கிருந்து தப்பித்தால் போதும் என்று இருவரும் ஓடி வந்துவிட்டோம். இது விஷயமாக சாஸ்திரத்தின் அபிப்ராயம் என்ன என்று தெரிந்துக் கொள்ளவே இங்கு வந்துள்ளோம்'' என்றான். இதைக் கேட்ட ஜகன்னாத கவி ''கவலைப்பட வேண்டாம். நாளைக் காலை இந்த ஊரின் சமீபத்தில் உள்ள குளத்தில் இவளை மூன்று தரம் 'ராம' என்ற நாமம் சொல்லி ஸ்நானம் செய்த பின் இவளுடன் தாம்பத்யமே நடத்தலாம்' என்று சொன்னார். இதைக் கேட்ட ஜகன்னாத கவியின் தாயார் - ''எதற்காக மூன்று முறை சொல்ல வேண்டும்? ஒரு முறை சொன்னாலே போதும்'' என்று சொன்னாள்.

இதுவரை திண்ணையில் உட்கார்ந்துக் கொண்டு இவைகளையெல்லாம் கவனித்து வந்திருந்த ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் ''நாராயண'' என்ற சப்தத்துடன் அவர்கள் முன் தோன்றினார். ஸ்வாமிகளின் தேஜஸையும் கம்பீர்யத்தையும் கண்டு அனைவரும் ஸ்வாமிகளை வந்தனம் செய்தார்கள். ஜகன்னாத கவியைப் பார்த்து தாங்கள் கூறியதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று கேட்க, தன்னுடைய தந்தை லக்ஷ்மீதர கவி செய்த ''பகவந்நாம கௌமுதி'' என்ற கிரந்தத்தை ஸ்வாமிகளிடம் ஜகன்னாத கவி கொடுத்தார். ஸ்வாமிகள் அந்த கிரந்தத்தில் உள்ள விஷயத்தைக் கிரஹித்துக் கொண்டார்.

மறுநாள் காலையில் எல்லோரையும் குளக்கரையில் கூட்டி ராம நாமம் உச்சரித்துக் கொண்டே ஸ்நானம் செய்த பதிதை எழும்பொழுது ஒரு ப்ராம்மண ஸுமங்கலி ஸ்வரூபத்தில் எழ, எல்லோரும் இந்த ஆச்சர்யத்தைக் கண்டு 'ராம ராம' என்று கர்ஜித்தார்கள். பதிதையும் ராம நாமாவால் பாவனமாகி விட்டாள் என்று உணர்த்த போதேந்திரர் அவளை பாகம் செய்யச் சொல்லி அன்று அவள் கைகளாலேயே பிக்ஷை ஏற்றுக் கொண்டார்.

பிறகு காஞ்சீ க்ஷேத்ரத்தை வந்தடைந்து நாம சித்தாந்தம் செய்து ஐந்து க்ரந்தங்களை அருளினார்.

பின்னர் தன்னுடைய குருநாதர் வடவாம்பலம் எனும் சிற்றூரில் ஸேது யாத்திரையின் பொழுது விதேஹ கைவல்யம் அடைந்து விடவே தனக்குப் பிறகு பீடத்திற்கு வாரிசாக அடுத்த ஸ்வாமிகளைப் பட்டம் கட்டிவிட்டு மடத்தை விட்டுக் கிளம்பி ஸ்வதந்த்ரமாக நாமப் ப்ரசாரம் செய்து வந்தார். எல்லோருக்கும் ஜாதி மத பேதம் பார்க்காமல் பகவந் நாமாவை உபதேசம் செய்தார். *நாம ஜபம் எடுத்துக் கொண்டிருந்த கிருஹத்தில் மட்டுமே பிக்ஷையெடுத்துக் கொள்வார்.* **போதேந்திர ஸ்வாமிகள், ஸதாஸிவ ப்ரம்மேந்திராள், ஸ்ரீதர ஐயாவாள் மூவரும் ஸம காலத்தவர்.** போதேந்திரரும் ஸ்ரீதர ஐயாவாளும் ஒன்றாக நாமப் ப்ரசாரம் செய்து வந்தார்கள். இவருடைய காலங்களில் தஞ்சாவூர் மாநிலத்தில் அநேக கிராமங்கள் பாகவத தர்மத்தைப் பின்பற்றி பாகவத கிராமங்களாக மாறின. இதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன்.

தஞ்சாவூர் கிராமம் ஒன்றில் தன்னுடைய வீட்டின் திண்ணையில் யதி ஒருவர் அமர்ந்திருப்பதை அந்த வீட்டின் மாதுஸ்ரீ பார்த்துத் தன் கணவரை அழைத்தாள். அதற்கு அப்புருஷர், "வாசலில் அமர்ந்திருந்த யதி சும்மா இருக்கிறானா அல்லது பகவந் நாமா சொல்கிறாரா?" என்று கேட்டார். அதற்கு

அந்த யதி அவரைப் பார்த்து ''சும்மா உட்கார்ந்திருக்கிறானா என்று ஏக வசனத்திலும் பகவந் நாமா சொல்கின்றாரா என்று பஹு வசனத்திலும் ஏன் கேட்டீர் என்று கேட்க, அதற்கு அந்த ப்ராம்மணர், 'நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம். எங்களுடைய குரு நாதரான ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் **யதியாக இருந்தாலும் பகவந் நாமா சொல்லாதவர்களுக்கு பிக்ஷை செய்விக்க வேண்டாம்.**' என்று சொல்லியிருக்கார். ஆதலால் நாங்கள் அப்படி நடந்து கொண்டோம் என்று கூறினார்.

*(தொடரும்)*

---

அறிவிப்பு 1 :

சந்தாதாரர்கள், மதுரமுரளி இதழக்குக் கடிதம் எழுதும்போது, தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு விவரம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மதுரமுரளி, வி. சங்கரன் (தொலைபேசி எண் 4840527), 5/3, MIG Flats, பி.டி. ராஜன் ரோடு, கே.கே. நகர், சென்னை-78.

✤ ✤ ✤

அறிவிப்பு 2 :

*Reproduction of any article from `Maduramurali' requires prior permission of Sri Guruji.*

✤ ✤ ✤

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 7

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

திருவண்ணாமலையில் கடை வைத்திருக்கும் முதலாளிகள் எல்லாம் சேஷாத்ரி ஸ்வாமிகள் தம் கடைக்கு வர மாட்டாரா என்று காத்திருப்பார்கள். ஸ்வாமிகள் கடைக்குள் வந்து அங்கு இருக்கும் பொருட்களை இறைத்து விட்டு சென்றால், அன்று அந்த வியாபாரிக்கு, என்றும் இல்லாத அளவுக்கு பெரிய வியாபாரம் நடக்கும்.

வீட்டு வாசலில் படித்துக் கொண்டு இருக்கும் குழந்தையின் புத்தகத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு போய் விடுவார் ஸ்வாமிகள். அந்தக் குழந்தை பிற்காலத்தில் பெரிய மேதாவியாகி விடுவான். அப்படி தீக்ஷையினால் அனுக்ரஹம் செய்த மஹாத்மா.

**பகவான் ரமணர் (திருவண்ணாமலையில்) பாதாள குகையில் இருந்ததைக் கண்டுபிடித்து உலகத்துக்குச் சொன்னதே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்தான்.**

சேஷாத்ரி ஸ்வாமிகள் ஒரு ஆதிகாரிக புருஷர், அவர் நம் பகவானைப் பற்றி கூறும்பொழுது "நான் பத்து ரூபா சம்பாதிச்சு இருக்கேன்னா இந்த ஸ்வாமி நூறு ரூபா சம்பாதிச்சு இருக்கார்," அப்படின்னு சொல்றார் என்றால் பகவானை "குரு ரத்தினம்" என்று கூறுவது மிகையாகாது.

பகவான் விருபாக்ஷி குகையில் இருக்கும்பொழுது சேஷாத்ரி ஸ்வாமிகள் அருணாசலேஸ்வரருக்கு விழுந்து

விழுந்து நமஸ்காரம் பண்ணுவார். அப்பொழுது பகவான் ஸ்வாமிகளைப் பார்த்து ''நமஸ்கரிப்பவன் யார்? நமஸ்கரிக்கப் படும் வஸ்து எது?'' என்று கேட்பார், ஸ்வாமிகளோ தனக்கு ஒன்றும் தெரியாது என்பார். பகவான், ஸ்வாமிகளுக்கு வேதாந்த விஷயங்கள் எல்லாம் எடுத்து சொல்வார். ஆத்ம விசார தத்துவங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார். ஸ்வாமிகள் பகவானுடைய பக்தர்களிடத்தில் கூறும்பொழுது பகவானுடைய தரிசனமே போதும் என்று கூறுவார். மஹாத்மாக்களால்தான் மஹாத்மாக்களை புரிந்து கொள்ள முடியும்.

அடுத்ததாக **'காவிய கண்ட கணபதி முனி'**. இவருடைய தகப்பனார் புத்திர ஸந்தானம் வேண்டும் என்று காசி க்ஷேத்திரத்தில் தபஸ் பண்ணினார். க்ஷேத்திர தேவதையான ''துண்டி கணபதி'' அனுக்ரஹம் செய்து பிறந்ததால் இவருக்கு கணபதி என்று பெயர். இவருக்கு கவித்துவம் ஆனது புத்திபூர்வமாக இல்லாமல் கண்டத்திலிருந்து வர்ஷிப்பதால் இவருக்கு காவிய கண்ட கணபதி முனி என்று பெயர். இவருக்கு 'சூரிய கணபதி' என்றும் பெயர் உண்டு.

இவர் எப்படிப்பட்டவர் என்றால் ''மந்திரமிலேஸ்வரர்''. இவரை எதிர்த்து எந்த வித்வத் சபையிலும் வித்வான்களால் பேசமுடியாது. எந்த விஷயத்தைக் கொடுத்து எப்படி வாதம் பண்ணச் சொன்னாலும் வாதம் பண்ணுவார். அனுபூதிமான் ஜோதிஷத்தில் மஹா நிபுணர். பெரிய தபஸ்வி, இவர் சாபம் கொடுத்தால் அந்த ஊரே பொசுங்கி விடும், அப்படிப்பட்ட தபஸ்வி. உடுப்பி க்ஷேத்திரத்தில் தபஸ் பண்ணும்பொழுது 6 நாள் சமாதி கலையாமல் இருந்தார்.

இப்பேர்ப்பட்ட கணபதி முனிகள் பகவானிடத்தில் எவ்வளவு தபஸ் பண்ணினாலும் மார்க்கம் புரியவில்லை என்று கூறுகிறார். பகவான் அவருக்கு ''தபஸ் பண்ணும்பொழுது மந்திரத்தோட த்வனி எந்த இடத்தில் ஆதாரமாக இருக்கு என்று

கவனிக்க வேண்டும். அது தான் தபஸ்ஸோட லக்ஷியம்'' என்று கூற, தனக்கு இப்பேர்ப்பட்ட மார்க்கத்தை காண்பித்துக் கொடுத்ததனால் ஸ்ரீ ரமணருக்கு **மார்கதர்ஷி: மகரிஷி** என்ற பட்டத்தைக் கொடுத்தார் சேஷாத்ரி ஸ்வாமிகள், கணபதி முனி போன்ற மஹாத்மாக்களால் பகவான் கொண்டாடப்பட்டதால் குரு ரத்தினம் என்றும் சொல்லலாம். பகவானுடைய ஜீவித காலத்தில் அவரை தரிசனம் பண்ணாத மஹாத்மாக்களே கிடையாது.

அடுத்ததாக **'பரமஹம்ஸ யோகாநந்தா'.** **"Autobiography of a Yogi"** என்ற புத்தகத்தை, தியானத்தில் ஈடுபடுபவர்களும், சாதகர்களும் அநேகமாக படித்திருப்பார்கள். இந்த புஸ்தகம் பரமஹம்ஸ யோகாநந்தா பற்றியது. இவர் பகவானை வந்து தரிசனம் பண்ணியிருக்கார்.

கேரளத்தில் **''நாராயண குரு''** என்று ஒரு மஹாத்மா இருந்தார். இவர் எந்த கோவிலுக்கும் செல்வதில்லை, எந்த மஹாத்மாவையும் பார்ப்பதில்லை என்று சங்கல்பமே செய்து இருந்தார். இவர் பகவானைப் பற்றிக் கேள்விப்பட்டு தன் சங்கல்பத்தையும் மீறி பகவானை தரிசனம் செய்தார்.

திருவண்ணாமலையில் பிரசித்தியாக இருக்கும் **யோகி ராம்சுரத் குமார்.** அவருடைய குரு **பாப்பா ராம்தாஸ்.** பகவானுடைய அனுக்கிரஹத்துடன் தான் தபஸ் பண்ணினார். யோகி ராம்சுரத் குமார் கூறும்பொழுது பகவான் தனக்கு அப்பா என்று கூறுவார். பகவான் தனக்கு அனுக்கிரஹம் பண்ணினார் என்றும் சொல்லுவார்.

இப்படி ஒவ்வொருவரும் பெரிய மஹாத்மா. அவரவர்களுக்கென்று பெரிய சிஷ்ய பரம்பரை உண்டு. அப்படிப்பட்டவர்களே பகவானிடத்தில் தஞ்சம் அடைந்து இருக்கிறார்கள் என்று கூறுவது மிகையல்ல.

ஆதி சங்கரர் அவதார காலத்தைத் தீர்மானம் பண்ணும் பொழுது, அந்த சம்பிரதாயத்தைச் சேர்ந்த எல்லாரும் ஒப்புக் கொள்வது ஒரு வெள்ளைக்காரன் தீர்மானம் பண்ணியதைத் தான். ஏன் என்றால் அந்த வெள்ளைக்காரன் ஒரு குதர்க்கி, சங்கர விஜயத்தை அலசிய அவன் பல விஷயங்களை ஒப்புக் கொள்ளவில்லை. நடக்காத பல விஷயங்கள் அதில் இருப்ப தாகக் குறை கூறுகிறான். அப்படிப்பட்டவன் சங்கருடைய அவதாரக் காலத்தைத் தீர்மானம் பண்ணினால் அது சரியாக இருக்கும் என்று அர்த்தம்.

`A Search in Secret India' என்ற புத்தகத்தில், இந்தியாவில் உள்ள எல்லா மஹான்களிடத்திலும் பழகி அவர்களிடத்தில் உள்ளக் குற்றங்களைக் கண்டு எழுதி இருக்கிறார். அப்படி அவர் குற்றம் கண்டுபிடிக்காதவர்களே கிடையாது எனலாம்.


Paul Brinton என்ற வெள்ளைக்காரன் அப்பழுக்கில்லாமல் ஒப்புக்கொள்ளும் மஹாத்மா மஹா பெரியவாளும், பகவானும் தான். Paul Brinton பகவானிடம் வந்து ஆத்ம சாக்ஷாத்காரம் அடையக் காரணம் மஹா பெரியவாதான்.

எந்த விஷயத்திலேயும் மஹா பெரியவாளுடைய அந்தரங்கமான அபிப்பிராயம் என்னவென்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. Paul Brinton தரிசனம் பண்ணும்பொழுது முதலில் பிடி கொடுக்காமல் பேசிய பெரியவா கடைசியாக ''நீ திருவண்ணாமலைக்குப் போய் ரமண மகரிஷியை தரிசனம் பண்ணாமல் போகக் கூடாது'' என்றார்.

---

**அறிவிப்பு 3 :**

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் ''அருணாசல அக்ஷர மண மாலை'' - முதல் இரண்டு பாகங்கள் - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் ப்ரேமிக பவனில் விலைக்குக் கிடைக்கும்.



பெரியவா நமக்குத் தெரிஞ்சு இந்த காலத்தில் வாழ்ந்து வந்த பெரிய மஹாத்மா, ஜீவன் முக்தர், அந்த காலத்து வஸிஷ்டரோ என்று எண்ணும்படி வாழ்ந்தவர், அப்பேர்ப் பட்டவர் காண்பித்து கொடுத்தவர் தான் பகவான் ரமண மகரிஷி.

*(தொடரும்)*

தொகுப்பு : **ஸ்ரீ முரளீதர தாஸன்**

# ப்ரச்நோத்தர ரத்நமாலிகா - 2

(ப்ரச்நம்: கேள்வி. உத்தரம்: பதில். வினா-விடைத் தொடராக மணியான கருத்துக்களைக் கோர்த்துத் தருவதால் இந்நூல் 'ப்ரச்நோத்தர ரத்நமாலிகா'' எனப்படுகிறது)

**க: ஸாது$^4$:? ஸத்வ்ருத்த:**
**கமத$^4$மமாசக்ஷதே? த்வஸத்$^3$ வ்ருத்தம் ।**
**கேந ஜிதம் ஜக$^3$தே$^3$தத்?**
**ஸத்ய திதிக்ஷாவதா பும்ஸா ॥** 18

கே :- ஸாது யார்?

ப :- நல்ல நடத்தையுடையவன்.

கே :- எவன் அதமன்?

ப :- கெட்ட நடத்தையுடையவன்தான்.

கே :- இந்த உலகை எவரால் வெல்ல முடியும்?

ப :- ஸத்தியமும், திதிக்ஷையும் இருப்பவரால், (எதிரெதிர் அநுபவங்களை சம நிலையில் தாங்கும் பொறுமை திறனே திதிக்ஷை.)

**கஸ்மை நமாம்ஸி தே$^3$வா:**
**குர்வந்தி? த$^3$யாப்ரத$^4$ாநாய ।**
**கஸ்மாதுத்$^3$வேக$^3$ஸ் ஸ்யாத்?**
**ஸம்ஸாராரண்யத: ஸுதிய$^4$: ॥** 19

கே :- எவனைத் தேவர்களும் கும்பிடுகிறார்கள்?

ப :- தயை உடையவனை.

கே :- எதைக்கண்டு நடுங்கவேண்டியது?

ப :- ஸம்ஸாரமாகிய காட்டைக் கண்டே நல்லறிவினர் நடுங்குவர்.

**கஸ்ய வசே ப்ராணிக$^{3}$ண: ?**
**ஸத்யப்ரியப$^{4}$ாஷிணோ விநீதஸ்ய ।**
**க்வ ஸ்த$^{2}$ாதவ்யம்? ந்யாய்யே**
**பதி$^{2}$ த்$^{3}$ருஷ்டாத்$^{3}$ருஷ்டலாபட்$^{4}$யே ॥** 20

கே :- ஜீவராசிகள் எவனுக்கு வசமாகும்?

ப :- ஸத்யமும் பிரியமுமான வசனமுடைய விநயமுள்ளவனுக்கு.

கே :- நிற்கவேண்டியது எங்கே?

ப :- காணப்படுவனவும், காணப்படாதனவுமாகிய (இஹபர) லாபங்கள் நிரம்பிய நியாயமான வழியில்.

**கோ(அ)ந்தோ? யோ(அ)கார்யரத:**
**கோ ப$^{3}$தி$^{4}$ரோ யோ ஹிதாநி ந ச்ருணோதி ।**
**கோ மூகோ? ய: காலே**
**ப்ரியாணி வக்தும் ந ஜாநாதி ॥** 21

கே :- குருடன் யார்?

ப :- கெட்ட காரியத்தில் களிப்பவன்.

கே :- செவிடன் யார்?

ப :- ஹிதத்தைக் கேட்காதவன்.

கே :- ஊமை யார்?

ப :- இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்ல அறியாதவன்.

**கிம் த$^{3}$ாநம்? அநாகாங்க்ஷம்,**
**கிம் மித்ரம்? யோ நிவாரயதி பாபாத் ।**
**கோ(அ)லங்கார:? சீலம்,**
**கிம் வாசாம் மண்ட$^{3}$நம்? ஸத்யம் ॥** 22

கே :- தானம் யாது?

ப :- கேட்காமல் கொடுத்தல்.

கே :- சிநேகிதன் யார்?

ப :- பாவத்திலிருந்து தடுப்பவன்.

கே :- எது அலங்காரம்?

ப :- சீலம்.

கே :- வாக்கிற்கு அழகு எது?

ப :- ஸத்யம்.

**வித்$^{3}$யுத்$^{3}$விலஸிதசபலம்**
**கிம்? துர்ஜநஸங்க$^{3}$திர் யுவதயச்ச ।**
**குலசீ லநிஷ்ப்ரகம்பா:**
**கே கலிகாலேபி? ஸஜ்ஜநா ஏவ ॥** 23

கே:- மின்னலொளிபோல் சஞ்சலமானவை யாவை?

ப :- துர்ஜனரின் ஸங்கமமும், ஸ்திரீகளும்.

கே :- கலிகாலத்திலும் குலசீலத்திலிருந்து சலிக்காதவர் (பிறழாதவர்) யார்?

ப :- ஸத் புருஷர்களே.

**சிந்தாமணிரிவ துர்லப$^{4}$ம்**
**இஹ கிம்? கத$^{2}$யாமி தச்சதுர்ப$^{4}$த$^{3}$ரம் ।**
**கிம் தத்$^{3}$-வத$^{3}$ந்தி பூ$^{4}$யோ?**
**விதூ$^{4}$ததமஸோ விசேஷேண ॥** 24

**தா$^{3}$நம் ப்ரியவாக்ஸஹிதம் ஜ்ஞாநம$^{3}$கர்வம்**
**க்ஷமாந்விதம் சௌர்யம் ।**
**வித்தம் த்யாக$^{3}$ஸமேதம்**
**துர்லப$^{4}$மேதத் நதுர்பத்$^{3}$ரம் ॥** 25

கே :- சிந்தாமணிபோல் துர்லபமானது (கிடைத்தற்கரியது) எது?

ப :- சதுர் பத்ரம் (நான்கு சுபப் பொருட்கள்.)

கே :- அந்தச் சதுர் பத்ரம் என்னவென்று அறிஞர் சொல்லுகின்றனர்?

ப :- பிரியவாக்குடன் செய்யும் தானம், கர்வமில்லாத ஞானம், க்ஷமையுடன் (க்ஷமிக்கும் பண்புடன்) கூடிய சூரத்தனம், தியாகத்துடன்கூடிய செல்வம்.

**கிம் சோச்யம்? கார்பண்யம்,**
**ஸதி விப[4]வே கிம் ப்ரசஸ்தம்? ஔத[3]ார்யம் ।**
**க: பூஜ்யோ வித்வத்பி[4]:?**
**ஸ்வப[4]ாவத: ஸர்வத[3]ா விநீதோ ய: ॥** 26

கே :- பரிதாபப்படத் தக்கது எது?

ப :- கார்ப்பண்ணியம். (கருமித்தனம். தனக்குமில்லாமல், பிறருக்குமில்லாமல், இகத்துக்குமில்லாமல், பரத்துக்குமில்லாமல் சேர்த்து வைத்துக் கொண்டிருத்தல்.)

கே :- செல்வச் செழிப்பு ஏற்பட்டக்கால் எது புகழுக்குரியது?

ப :- உதார குணம். (வாய்மை)

கே :- அறிவுடையோரால் யார் பூஜிக்கப்படுவர்?

ப :- இயல்பாகவே எப்பொழுதும் வணக்கமுள்ளவரை.

**க: குல கமலதி[3] நேச:?**
**ஸதி கு[3]ணவிபவே(அ)பி யோ நம்ர: ।**
**கஸ்ய வசே ஜக[3]தே[3]தத்?**
**ப்ரியஹித[4]வசநஸ்ய த ர்மநிரதஸ்ய ॥** 27

கே :- எந்தச் சூரியனைக் கண்டால் நம் குலமான தாமரை ஆனந்தத்துடன் பிரகாசிக்கும்?

ப :- குணங்கள் பரிபூர்ணமாகவிருந்தும், விநயத்துடன் இருப்பவன்.

கே :- இந்தப் பிரபஞ்சம் யாருக்கு வசப்படும்?

ப :- பிரியமாக இத வாக்கு சொல்பவனாகவும், தர்மத்தை

அநுஷ்டிப்பவனாகவும் இருப்பவனுக்கு.

**வித்$^3$வந்மநோஹரா கா?**
**ஸத்கவிதா-பே$^2$ாத$^4$வநிதா ச ।**
**கம் ந ஸ்ப்ருசதி விபத்தி: ?**
**ப்ரவ்ருத்$^3$த$^4$வசநா-நுவர்த்திநம் த$^3$ாந்தம் ॥ 28**

கே:- வித்வான்களின் மனத்தைக் கவர்பவள் யார்?
ப.- நற்கவிதைக் கன்னியும்-ஞான மடந்தையும்.

கே :- விபத்து எவனைத் தீண்டாது?
ப :- பெரியோர் வார்த்தையை அனுஸரித்து நடப்பவனையும், அடக்கமுள்ளவனையும்.

**கஸ்மை ஸ்ப்ருஹயதி கமலா?**
**த்வநலஸசித்தாய நீதிவ்ருத்தாய ।**
**த்யஜதி ச கம் ஸஹஸா? த்$^3$விஜ**
**கு$^3$ருஸுர நிந்த$^3$ாகரம் ச ஸாலஸ்யம் ॥ 29**

கே : - லக்ஷ்மி யாரை விரும்புவாள்?
ப : - சோம்பாத சித்தமும், நீதிப்படியான நடத்தையுமுடையவனை.

கே : - எவனை விரைவில் விட்டு விலகுவாள்?
ப : - பிராம்மணன், குரு, தேவர் ஆகியோரை நிந்திப்பவனையும், சோம்பல் உடையவனையும்.

**குத்ர விதே$^4$யோ வாஸ:?**
**ஸஜ்ஜநநிகடே (அ)த$^2$வா காச்யாம் ।**
**க: பரிஹார்யோ தேச:?**
**பிசு நயுதோ லுப்$^3$த$^4$பூ$^4$பச்ச ॥ 30**

கே : - வாசஞ் செய்ய வேண்டியது எங்கே?
ப : - நல்லவர்களுடைய சமீபத்தில் அல்லது காசி க்ஷேத்திரத்தில்

கே : விட்டு விலகவேண்டிய தேசம் யாது?

ப : - கீழ் மக்களுள்ளதும், லோபியான அரசனுடையதுமான தேசம்.

**கேநாசோச்ய: புருஷ:?**
**ப்ரணதகலத்ரேண தீ4ரவிப4வேந ।**
**இஹ பு4வநே க: சோச்ய?**
**ஸத்யபி விப4வே ந யோ தா3தா ॥** 31

கே : - எதனால் மனிதன் துக்கமில்லாதவனாவான்?

ப : - வணக்கமுள்ள மனைவியினாலும், நிலையுள்ள செல்வத்தாலும்,

கே : - இவ்வுலகில் விசனிக்கப்படத் தக்கவன் எவன்?

ப : - பொருளிருந்தும் எவன் கொடையாளியாயில்லையோ அவன்.

**கிம் லகு4தாயா மூலம்?**
**ப்ராக்ருதபுருஷேஷு யா யாச்ஞா ।**
**ராமாத2பி க: சூர:?**
**ஸ்மரசரர்நிஹதோ ந யச்சலதி ॥** 32

கே : - இகழ்ச்சிக்குக் காரணம் எது?

ப : - தாழ்ந்தவர்களிடம் யாசிப்பது

கே : - ஸ்ரீராமனைவிட சூரன் யார்?

ப : - மன்மத பாணங்கள் அடித்தாலும் தன்னிலை தவறாதவன்

**கிமஹர்நி ச மநுகிந்த்யம்?**
**ப4க3வச்சரணம் ந ஸம்ஸார: ।**
**சக்ஷுஷ்மந்தோப்யந்த4:**
**கே ஸ்யு:? யே நாஸ்திகா மநுஜா: ॥** 33

கே : - இரவும், பகலும் சிந்திக்கத்தக்கது எது?

ப : - ஈச்வரனது பாதார விந்தங்களே-ஸம்ஸாரமல்ல.

கே : - கண்ணிருந்தும் குருடர்களாயிருப்போர் யாவர்?

ப : - நாஸ்திகர்களான மனிதர்கள்.

**க: பங்கு³ரிஹ ப்ரதி²த:?**
**வ்ரஜதி ச யோ வார்த⁴கே தீர்த³ம் ।**
**கிம் தீர்த²மபி ச முக்²யம்?**
**சித்தமலம் யந்நிவர்தயதி ॥** 34

கே : - முடவன் யார்?

ப : - முதிர்ந்த வயதில் தீர்த்த யாத்திரை போகிறவன். (முதுமைக்குள் ஒருவன் தான் உள்ளவிடத்திலேயே, தன் உள்ளத்திலேயே இறைவனை உணர வேண்டுமேயன்றி, அதற்கு ஆரம்பமாக, இளமையில் மேற்கொள்ள வேண்டிய தீர்த்த யாத்திரை முதுமையின்போது மேற்கொள்வதில் பலனிராது.)

கே : - முக்யமான தீர்த்தம் எது?

ப : - சித்தத்திலுள்ள அழுக்கை எது நீக்குகிறதோ அதுதான்.

**கிம் ஸ்மர்தவ்யம் புருஷை:?**
**ஹரி நாம ஸதா³, ந யாவநீ பாஷா ।**
**கோ ஹி ந வாச்ய: ஸுதி⁴யா?**
**பரதோ³ஷச் சாந்ருதம் தத்³வத் ॥** 35

கே : - மனிதர்களால் ஸ்மரிக்கத்தக்கது எது?

ப : - எப்பொழுதும் ஹரி நாமமே, யவனரின் பாஷையல்ல. (பழங்காலத்தில் கிரேக்க மொழியிலிருந்த பற்றுதலைப் பற்றி ஸ்ரீ ஆச்சார்யாள் கூறுகிறார்.)

கே : - நல்ல புத்தியுடைவனால் சொல்லத்தகாதது எது?

ப : - பிறரது குற்றமும், அஸத்யமும்.

*(தொடரும்)*

# செய்திகள்

## ஜனவரி 17-ந் தேதியன்று

*'அத்வைத ஸித்தி - வாக்யார்த்த ஸதஸ்'* சென்னை பிரேமிக பவனத்தில் வழக்கம் போல் நடைபெற்றது.

❀ ❀ ❀

## ஜனவரி 18-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை

ஐதராபாத், ஆனந்த நகர் - கம்யூனிட்டி ஹாலில், ஸ்ரீ குருஜி *'பக்த விஜயம்'* உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

❀ ❀ ❀

## ஜனவரி 20 & 21-ந் தேதிகளில்

*அஷ்டபதி பஜனையுடன் ராதா கல்யாணமும்* வெகு விமரிசையாக நடந்தேறியது. மேற்படி ஐதராபாத் விஜயத்தின் பொழுது ஸ்ரீ குருஜி ஸ்கந்தகிரி சங்கர மடம் மற்றும் பல ஸத் ஸங்கங்களுக்கும் சென்று உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

22-ந் தேதி காலை புறப்பட்டு பம்பாய் சென்றடைந்தார். ஐதராபாத் நிகழ்ச்சிகள் முழுவதையும் நமது மிஷனின் ஐதராபாத் தலைவர் ஸ்ரீ ரவிச்சந்திரன், C.A. பொறுப்பேற்று மிகவும் அழகாக திறம்பட நடத்தினார்.

❀ ❀ ❀

## ஜனவரி 27 & 28-ந் தேதிகளில்

பம்பாய் பஜன சமாஜத்தில் *ஸ்ரௌத ஸம்ரக்ஷண வித்வத் ஸம்மேளனம்* வெகு விமரிசையாக நடந்தேறியது. முசிறி தீக்ஷிதர் ஸ்ரீ அனந்த நாராயண வாஜ்பாயி தலைமை வகித்து

முழுவதும் இருந்து நடத்திக் கொடுத்தார். ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமாயாஜி மிகவும் அழகாக ஸம்மேளனத்தை நிர்வகித்து நடத்தினார். வித்வான்கள் எல்லோரும் உத்ஸாஹமாக கலந்து கொண்டு அழகாகப் பேசினார்கள். இரண்டு நாட்களும் மாலையில் ஸ்ரீ குருஜியின் உபன்யாசத்தைக் கேட்க திரளாக மக்கள் வந்திருந்தனர்.

வந்தவர்களுக்கு போஜன வசதி, தங்கும் ஏற்பாடு போன்ற அனைத்து நிர்வாக ஏற்பாடுகளையும் நமது பம்பாய் மிஷன் தலைவர் சிரஞ்சீவி சேதுராமன் (Manager, Canara Bank) முன் நின்று மிகவும் பொறுப்புடன் திறம்பட நிர்வகித்து நடத்திக் கொடுத்தார்.

❀ ❀ ❀

## பிப்ரவரி 2 & 3-ம் தேதிகளில்

ஸ்ரீ குருஜி *கும்பகோணம்* சென்று ஆரா அமுதனை ஸேவித்து வந்தார்கள்.

❀ ❀ ❀

## பிப்ரவரி 17-ம் தேதி

விழுப்புரம் அருகிலுள்ள *'வடவாம்பலம்'* ஸ்ரீ ஆத்ம போதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் *மஹாசிவராத்திரி* அன்று ஸ்ரீ குருஜி ஐந்து கால அபிஷேகம், பூஜை, ஆராதனை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இரவு 7 மணிக்கு ஆரம்பித்த பூஜை மறு நாள் விடியற்காலை 4 மணிக்கு முடிந்தது. சென்னையிலிருந்தும், சுற்றுப்புறத்திலிருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானார்கள்.

❀ ❀ ❀

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**மார்ச் 2 & 3-ந் தேதிகள்**

சென்னை, மேற்கு மாம்பலம் சக்ரபாணி தெருவில் உள்ள அனுமார் கோயிலில் ஸ்ரீ குருஜி அவர்களால் *ஸ்ரீ போதேந்திராள் சரித்திரமும், ஸ்ரீ துளசிதாஸர் சரித்திர உபன்யாஸமும்* நிகழ்த்தப்படும்.

❀ ❀ ❀

**மார்ச் 4-ந் தேதி**

*மாசி மகத்தை* முன்னிட்டு சென்னை கோவளம் அருகிலுள்ள திருவிடந்தையில் பெருமாளுக்கு *தீர்த்தவாரி* உத்ஸவம் பிரதி வருடம் நடப்பது போல் நிகழ்த்தப்படும்.

❀ ❀ ❀

**மார்ச் 19-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை.**

செகந்திராபாத் Keyes High School வளாகத்தில், ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு, ஸ்ரீ குருஜி அவர்களால் *'பக்த விஜயம்'* உபன்யாஸம் நிகழ்த்தப்படும்.

---

**முன் அட்டைப் படம் :**

சென்னை மயிலை ஆர்.ஆர். ஸபாவில் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் *'அக்ஷர மண மாலை'* - உபன்யாஸத் தொடர் நிகழ்த்த வந்த ஸ்ரீ குருஜியை, ரமண கேந்திராவைச் சேர்ந்த ஸ்ரீ ரமணானந்தாவும், மற்ற பெரியோர்களும் பூரண கும்பத்துடன் வரவேற்கும் காட்சி.

**பின் அட்டைப் படம் :**

பம்பாய், மாதுங்கா சௌத் இண்டியன் பஜன ஸமாஜில் ஜனவரி 27, 28-ந் தேதிகளில் நடந்த *ஸ்ரௌத ஸம்ரக்ஷண வித்வத் ஸம்மேளனத்தில்* கலந்து கொண்ட வேத வித்வான்களுடன் ஸ்ரீ குருஜி.

---

*This Issue Photographs by* Sri S. Sridhar

---

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 Regd. No. TN/MS/(S)/714

Single Copy Rs. 5/- Annual Subs. Rs. 60/-

வேணு : 1 மார்ச் 1996 கானம் : 8



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar